# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,212 — 1960 ඔක්තෝබර් 14 වැනි සිකුරාදා — 14.10.1960**

12,212 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 243 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 244 | நாணுவிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் துறை

வட மாகாணத்திலுள்ள தண்ணீர்முறிப்புத் திட்டத்தைப் பெருப்பிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1 இல் உள்ள செயலகத்தின் 355 ஆம் இலக்க அறையிலுள்ள கமத்தொழில், காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத்துறையிலும் புகையிரதப்பகுதியிலும் பொது மராமத்து இலாகாவிலும், ரூ. 100,000 க்கும் அதற்கும் மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் தேவையான மண்ணள்ளும் இயந்திரமுள்ளவர்கள் மட்டுமே மேற்படி கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையோராவர். வவுனியாவிலுள்ள வட பிரிவுப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இரு பிரதி கொண்ட கேள்விப் பத்திர விண்ணப்பத்தாள்களில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்திலும், அல்லது கொழும்புக்கு வெளியே எந்தக் கச்சேரியிலேனும் ரூபா 250 கட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து 1960 ஆண்டு கார்த்திகை 4 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக வேலை நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு விபரங்களுக்கு வவுனியாவிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. செல்லகேவா,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1960 ம் ஆல அக்டோபர் மீ 4 ந உ.

10–239.

### நீர்ப்பாசன இலாகா

நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து உறுகாமப் பகுதியில் 1960–61 ம் வருடத்தில் பலவிதமான சாமான்கள் ஏற்றி இறக்கும் வேலைக்கு 26–10–60 ம் ஆண்டு புதன்கிழமை காலை 9.30 மணிவரையும் மட்டக்களப்பு கிழக்குப்பிரிவிலுள்ள பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முழுவிபரங்களையும், கேள்விப்பத்திரங்களையும் 25–10–60 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரை நீர்ப்பாசன பொறியியலாளர், செங்கலடி அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெற விரும்பும் ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அரசாங்கத்தில் அல்லது நீர்ப்பாசன இலாகாவில் அல்லது வேறு பகுதிகளில் ஏற்கனவே ஒப்பந்த வேலை செய்ய உடன்பட்டு அவ்வேலைகள் முடிவடையாவண்ணம் இருந்தால் அவ்வப்பகுதி முகாமைக்காரரிடம் அத்தகைய வேலைகளின் தொகையையும் செய்யும் வேலையின் திருப்தியை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு சாட்சிப்பத்திரங்கள் பெறமுடியும்.

மேற்கொண்டு விபரங்களை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த செங்கலடியிலுள்ள உறுகாம நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சி. ஜெயசிங்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
உறுகாம உப பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம், செங்கலடி,
1960 ம் ஆல புரட்டாதி மீ 13 ந உ.

9585.

### நீர்ப்பாசன இலாகா

வட பகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் கீழ்க்காணும் வேலைகளுக்காகிய விண்ணப்பப்பத்திரங்களை இவ் வருடத்திய நவம்பர் மாதம் 8 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரையும் நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் :—

| | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை ரூ. | கேள்விப்பத்திரத்திற் குறிய கட்டுப் பணம் ரூ. | இலாகாவினுல் இனுமாகக் கொடுக்கப் படும் வேலைக்காகிய பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி ஆறு அணைகட்டு வேலை .. | 20,000 .. | 25 .. | சீமந்து மட்டும் |
| 2 | புதூர் குளத் திருத்தல் வேலை .. | 30,000 .. | 25 .. | சீமந்துக்குழாய், சீமந்து, துருசுகதவு |
| 3 | இலங்காத்த குளம் திருத்தல் வேலை .. | 45,000 .. | 25 .. | சீமந்து மட்டும் |

2. விண்ணப்பப் பத்திரங்கள் இவ் வருட நவம்பர் மாதம் 7 ந் திகதி திங்கட்கிழமை வரையும் வவுனியாப் பகுதி நீர்ப்பாசன இஞ்சினியரின் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங்கட்கு காரியாலயத்திற்கு நேர்முகமாக வந்தோ அல்லது மனுச்செய்தோ கோரவும்.

3. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசம் இருப்பின் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து அவ் வேலைகள் திருப்திகரமாகச் செய்யப்படுகிறதென்றும், அத்துடன் வேலைகளின் பெயரும், ஒப்பந்தங்களின் தொகையும் மேற்கூறிய வேலைகட்கு விண்ணப்பிக்கும் பொழுது ஒரு அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிப்பதுடன், மேலும் இவ்வத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடாத வேறு வேலைகளெதுவும் கைவசமில்லையென்றும் அத்தாட்சிப் படுத்தவேண்டும்.

வி. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்சினியர், வவுனியாப் பகுதி.

6.10.60.

10–218.

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

### இலங்கை அரச கடற்படை

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம் திகதி காலை 10 மணிக்கு, திருகோணமலை டொக்யாடில் உபயோகமற்ற பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

2. பொருட்களை, விற்பனை யன்று காலை 7 மணிமுதல் பார்வையிடலாம்.

2. ஏலம் முடிந்த பொருட்களுக்கு உடனே முழுப்பணமும் கட்டவேண்டும்.

4. டொக்யாட்டுக்குள் செல்லவும், வாங்கிய பொருட்களை வெளியெடுத்துச்செல்லவும், வேண்டிய அனுமதிச் சீட்டை திருகோணமலை கடற்படை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10–136.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது